டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 17.01.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 173 - Madurai | Online Edition

# தமிழ்நாட்டின் கொந்தகை ஏரியில் பெறப்பட்ட பருவநிலைப் பதிவுகள் பல்லுயிர் உத்திகளை செயல்படுத்த உதவும்!

புது தில்லி, ஜன.16

தமிழ்நாட்டின் சிவகங்கை அருகே உள்ள கொந்தகை ஏரி (கண்மாய்), பகுதியில் மிக விரிவான பருவநிலை அம்சங்களில் ஒன்று ஒரு ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

கொந்தகை ஏரி, கீழடிக்கு அருகில் அமைந்துள்ளது. இது ஒரு குறிப்பிடத்தக்க தொல்பொருள் தளமாகும். இது சங்க காலத்தி லிருந்து ஒரு அதிநவீன நகர்ப்புற நாகரிகத்தின் சான்றுகளைக் கொண்டுள்ளது. இது கிமு 6-ம் நூற்றாண்டு அல்லது அதற்கு முந்தையதாக இருக்கலாம் என ஆய்வுகள் கூறுகின்றன. இங்குள்ள ஏரி, கடந்த கால பருவமழை மாறுபாடுகள் தொடர்பாகப் புரிந்து கொள்ள ஒரு அரிய வாய்ப்பை வழங்கி இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர் .

அறிவியல், தொழில்நுட்பத் துறையின் (DST) தன்னாட்சி நிறுவன மான லக்னோவில் உள்ள பீர்பால் சாஹ்னி தொல்பழங்கால அறிவியல் நிறுவனத்தின் (BSIP) ஆராய்ச்சியாளர்கள், ஒரு மீட்டருக்கும் அதிகமான ஆழத்தில் ஒரு வண்டல் பகுதியைத் தோண்டி, 32 நெருக்கமான இடைவெளி மாதிரிகளைச் சேகரித் தனர். ரேடியோகார்பன் டேட்டிங் உள்ளிட்ட நுட்பங்களைப் பயன்ப டுத்தி, கடந்த கால மழைப்பொழிவு, தாவரங்கள், ஏரி அளவுகள், வெள்ள நிகழ்வுகளை அதிக துல்லியத்துடன் கண்டறிந்தனர்.

இந்த ஆராய்ச்சி தொல்லியல் மற்றும் கலாச்சார பாரம்பரியத்திற்கு குறிப்பிடத்தக்க வகையில் பயனளிக்கிறது. கீழடிக்கு அருகில் அமைந்துள்ள கொந்தகை ஏரியின் சுற்றுச்சூழல் வரலாறானது, பருவநிலை மாறுபாடு, நீர் பற்றாக்குறை போன்றவற்றுக்கு ஏற்ப பழங்கால சமூகங்கள் எவ்வாறு தகவமைத்துக் கொண்டன என்பது குறித்த முக்கிய நுண்ணறிவுகளை வழங்குகிறது. இது பிராந்திய பாரம்பரிய திட்டமிடலை வலுப்படுத்துகிறது.

# குறுகிய செலவில் பெருகிய மகசூல் வேளாண் கல்லூரி மாணவிகள் விளக்கம்

இராமநாதபுரம், ஜன.16

இராமநாதபுரம் மாவட்டம், திருச்சுழி வட்டாரம், கல்லூரணி அருகே உள்ள குள்ளம்பட்டி கிராமத்தில் வேளாண்மை விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.



இராமநாதபுரம் மாவட்டம், கமுதி அருகே உள்ள பேரையூர் நம்மாழ்வார் வேளாண் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள் ஊரக வேளாண் அனுபவப் பயிற்சியின் கீழ் வேளாண்மை விழிப்புணர்வு முகாம் நடத்தினர். இந்நிகழ்ச்சியில் பயிர் சாகுபடி மற்றும் மண்வள மேம்பாட்டில் இயற்கை விவசாயத்தின் பெரும் பங்கினை விவரித்தனர். இயற்கை முறையில் பயிர்களில் மகசூலை அதிகரிக்கும் உள்நாட்டு தொழில்நுட்ப அறிவான ஜீவாமிர்தம் பற்றி மக்களிடையே கூறினர்.

ஜீவாமிர்தம் செய்வதற்கான செயல்முறை விளக்கம் அளித்து, பயன்படுத்தும் முறைகள் மற்றும் அதன் பயன்கள் குறித்து விவசாயிகளிடம் கூறினர். இயற்கை விவசாயிகள் அதிகமாக பயன்படுத்தி வரும் உயிர் உரம் ஜீவாமிர்தம். மண்ணில் நுண்ணுயிரிகளை அதிகரித்து பயிர்களின் வளர்ச்சியை இயற்கையான முறையில் ஊக்குவிப்பது மட்டுமல்லாமல் பசுவின் கழிவுகளை அடிப்படையாகக் கொண்டதால் இந்த உரம் பயிர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து மகசூலையும் கூட்டுகிறது என்று விவசாயிகளிடம் வலியுறுத்தினர். இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளால் பாதிக்கப்பட்ட மண்ணை மீண்டும் உயிர்ப்பிக்க இயற்கை முறையில் விவசாயம் செய்ய வேண்டும் என்று ஊர் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்
# மசாலா பொடிகள் மற்றும் ஊறுகாய்கள் தயாரிப்பு பயிற்சி

கோயம்புத்தூர், ஜன.16

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மசாலா பொடிகள் மற்றும் ஊறுகாய்கள் தயாரிப்பு பயிற்சி 19.01.26 மற்றும் 20.01.26 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மருதமலை சாலை வழி, கோயம்புத்தூர்) நடைபெறும். கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- மசாலா பொடிகள் (சாம்பார் பொடி, ரசப் பொடி, கறிமசால் பொடி, பருப்பு பொடி, சிக்கன் 65 மசாலா பொடி)
- தயார் நிலை பேஸ்ட்
- காளான் ஊறுகாய்
- வாழைப்பூ ஊறுகாய்
- பாகற்காய் ஊறுகாய்
- கத்தரிக்காய் ஊறுகாய்
- வெங்காய ஊறுகாய்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1,500 + GST 18%)- பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 94885 18268, 0422 6611340, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# சிறுகமணி கேவிகேயில்

# காளான் வளர்ப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சி

திருச்சி, ஜன.16

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக காளான் வளர்ப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சி வருகின்ற ஜனவரி 20 ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) அன்று சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற உள்ளது.

இப்பயிற்சியானது வீட்டிலிருப்போர், மாணவர்கள், தொழில் முனைவோர், வியாபாரிகள் மற்றும் தொண்டு நிறுவனங் களுக்கு நல்ல வாய்ப்பாக அமையும். இப்பயிற்சியில் வைகோல் சுத்த படுத்துதல், கொட்டகை அமைத்தல், பை நிரப்புதல் செயல்முறை, சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பு, உரி தொங்கும் முறை, சந்தைப் படுத்தல் உத்தி, பையில் உள்ள சிக்கல்களை எப்படி தீர்ப்பது, காளான் மதிப்புகூட்டல், காளான் கழிவுகளை கால்நடை தீவனமாக மாற்றுவது, குடில் பராமரிப்பு/அமைப்பு ஆகியவைகள் பற்றி தெளிவாக எடுத்துரைக்கப்பட உள்ளது.

மேலும் விவரங்கள் மற்றும் முன்பதிவிற்கு கீழ்கண்ட எண்களை 0431-2962854 / 91717 17832 / 99447 53354 / 90805 40412 / 88381 26730 தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளவும். பயிற்சியானது காலை 10.00 முதல் மாலை 4.30 வரை நடைபெறும். பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு கையேடு, மதிய உணவு வழங்கப்படும். பயிற்சியின் இறுதியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ளும் ஆர்வம் உள்ளவர்கள் திங்கட்கிழமை மதியம் 2.00 மணிக்குள் இந்த எண்ணில் (91717 17832 / 99447 53354 / 90805 40412 / 88381 26730) தங்களது பெயரை பதிவு செய்யவும். முதலில் முன்பதிவு செய்யும் 20 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.

மேற்கண்ட தகவலை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு (917171 7832) தெரிவித்தார்.

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

**நன்றி**

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஒட்டுண்ணிகள் மற்றும் இரைவிழுங்கிகள் வளர்ப்பு மற்றும் பயன்படுத்தும் முறைகள் பற்றிய பயிற்சி

கோயம்புத்தூர், ஜன.16

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பூச்சியியல் துறை மூலமாக 'ஒட்டுண்ணிகள் மற்றும் இரை விழுங்கிகள் வளர்ப்பு மற்றும் பயன்படுத்தும் முறைகள்' பற்றிய ஒரு நாள் பயிற்சி 21.01.26 (புதன்கிழமை) அன்று அளிக்கப்படும். பயிற்சியின் முக்கிய அம்சங்களாவன,

- ஒட்டுண்ணி வகைகள்
- ஊண் விழுங்கிகள், இரை விழுங்கிகள்
- நெல் அந்துப்பூச்சி வளர்ப்பு முறை
- டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணிவளர்ப்பு
- புழு ஒட்டுண்ணி வளர்ப்பு
- கண்ணாடி இறக்கைப் பூச்சி வளர்த்தல்
- பொறி வண்டு வளர்ப்பு
- பயிர் பாதுகாப்பில் ஒட்டுண்ணிகள் மற்றும் இரை விழுங்கிகள் பயன்பாடு

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் 21.01.2026 (புதன்கிழமை) அன்று காலை 9.00 மணிக்குள்ளாக பூச்சியியல் துறைக்கு தங்கள் செலவில் வந்து சேர வேண்டும். பயிற்சியில் கலந்து கொள்வதற்கு ரூ.900/- (ரூபாய் தொள்ளாயிரம் மட்டும்) நேரிடையாக பயிற்சி நாள் அன்று செலுத்த வேண்டும். பயிற்சி நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை. பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 0422 - 6611214, 6611414, மின்னஞ்சல் : entomology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

# கோழிப்பண்ணையை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவிகள்

பெரம்பலூர், ஜன.16

நாளந்தா வேளாண் கல்லூரி மாணவிகள், தங்களது கல்வி பயிற்சியின் ஒரு பகுதியாக, பெரம்பலூர் மாவட்டம், பாப்பாங்கரை கிராமத்தில் செயல்பட்டு வரும் கோழிப் பண்ணையை பார்வையிட்டனர்.






இந்த பயிற்சி பயணத்தின் போது, கோழி வளர்ப்பு முறைகள், கோழிக்குஞ்சு மேலாண்மை, உணவளிப்பு, தடுப்பூசி மற்றும் நோய் மேலாண்மை, சுகாதார பராமரிப்பு, முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தி முறைகள் குறித்து பண்ணை உரிமையாளர் மாணவிகளுக்கு விரிவாக விளக்கினார்.

மேலும், கோழிப்பண்ணைத் தொழிலின் பொருளாதார முக்கியத்துவம், செலவு–வருமான கணக்கீடு, சந்தைப்படுத்தல் வாய்ப்புகள் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கு இது வழங்கும் வேலைவாய்ப்புகள் குறித்தும் மாணவிகள் அறிந்து கொண்டனர்.

மேலும், அரசு வழங்கும் கோழிப்பண்ணை வளர்ப்பு மானியங்கள், வங்கி கடன் வசதிகள், கால்நடை துறை மூலம் வழங்கப்படும் தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகள் குறித்து மாணவிகள் அறிந்து கொண்டனர். இதன் மூலம், எதிர்காலத்தில் சுயதொழிலாக கோழிப்பண்ணைத் தொடங்குவதற்கான நடைமுறை வழிமுறைகள் குறித்து அவர்களுக்கு தெளிவான புரிதல் ஏற்பட்டது. மாணவிகள் பண்ணையின் தினசரி செயல்பாடுகளை நேரில் பார்வையிட்டு, கோழி வளர்ப்பு தொடர்பான நடைமுறை அனுபவத்தை பெற்றனர்.

இந்த பார்வை பயணம், மாணவிகளின் வேளாண் துணைத் தொழில்கள் குறித்த அறிவை மேம்படுத்துவதுடன், தொழில் முனைவுத் திறனை ஊக்குவிக்கும் வகையில் அமைந்தது.

இந்த நிகழ்வில் கல்லூரி இறுதி ஆண்டு மாணவிகளான வ.கிருபாலினி, தி.ஜீவிதா, ரா.கவியா, ம.காவ்யா, செ.காயத்திரி, பா.கீர்த்திகா, மு.கிருத்திகா மற்றும் தி.மீனா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW
isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID
BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நெல்லில் தண்டு துளைப்பான் நோயைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



தஞ்சாவூர், ஜன.16

தஞ்சாவூர் குருங்குளம் பகுதியில் அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மாணவிகள் நெல்லில் தண்டு துளைப்பான் நோயைப் பற்றியும், SRI முறையை பற்றியும் அவ்வூர் விவசாயி களுக்கு எடுத்துக்கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

அதில் மாணவிகள் கூறியதாவது, நெல்லில் அதிகமாக தண்டு துளைப்பான், இலைச்சருள் நோய் தாக்குதல் அதிகமாக இருக்கும். அதை கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா அட்டையை பயன் படுத்துங்கள். இந்த அட்டையை நெல் பயிரிட்ட 30-வது நாளில் அல்லது மூன்று முதல் நான்கு இலைநிலையில் பின் பகுதியில் அட்டையை வைத்து பின்னடிக்க வேண்டும். இதிலிருந்து வெளி வரும் பூச்சி அந்த நோய் தாக்கும் பூச்சியின் உடலில் முட்டையிட்டு அதை இனப்பெருக்கம் அடைவதை தடுக்கும். இதை ஒரு ஏக்கருக்கு 14 சிசி வைக்க வேண்டும் என்றனர். பின்னர் SRI முறை என்பது பொதுவாக நாம் நெல் பயிரிடும் முறையை காட்டிலும் சற்று செலவும் குறைவாக காணப்படும். இத்துடன் விளைச்சலும் அதிகமாக இருக்கும். இதில் குறிப்பாக YOSCI என்பது பின்பற்றப் படுகிறது. அதாவது Y என்பது இளம் வயது நாற்றுக்கள், O என்பது ஒரு குழிக்கு ஒரு நாற்று, S என்பது சதுர வடிவில் பயிரிடுதல் (25×25cm), C என்பது கோனோ களைநீக்கியை பயன்படுத்துதல், I என்பது காய்ச்சலும் பாய்ச்சலும் முறையை குறைக்கும். காய்ச் சலும் பாய்ச்சலும் முறை என்பது நீர் சற்று குறைந்த பிறகு இரண் டாவதாக நீர் கட்டுதல். பொதுவான நெல்முறையில் நெல்லுக்கான இடைவெளி அதிகம். ஒரு குழிக்கு மூன்று முதல் ஏழு நாட்கள் வரை வைக்கலாம். மனிதர்கள் மூலம் களையை நீக்குதல். தண்ணீர் எப்போதும் இரண்டு முதல் இரண்டு புள்ளி ஐந்து சென்டிமீட்டர் வரை வயலில் நிற்கும் இவ்வாறு SRI மற்றும் பொதுவான நெல் வளர்ப்பை ஒப்பிட்டு, SRI-ன் பலன்களை எடுத்துக் கூறி விவசாயி களுக்கு அறிவுறுத்தினர்.

# ஒருங்கிணைந்த உர மேலாண்மை (INM)

ஒருங்கிணைந்த உர மேலாண்மை என்பது (INTERGRATED NUTRIENTS MANAGEMENT) ஒரு விவசாய தொழில்நுட்பம் மட்டுமல்ல, இது ஒரு நிலையான விவசாயம் மற்றும் மண் பாதுகாப்பிற்கான ஒரு அடித்தளமாகும்.




கரிம கனிம மற்றும் உயிரியல் ஊட்டசத்துகள் மூலங்களை கலப்பதன் மூலமாக (INM), சுற்றுச்சூழல் சமநிலைமை வளர்ப்ப துடன் மண்வளம், மகசூல் வளத்தை பெருக்கி உணவு பாதுகாப்பை (FOOD SECURITY) உறுதி செய்கிறது. காலநிலை மாற்றம், மண் சீரழிவு ஆகிய இரட்டை சவால்களை (CHALLENGE) எதிர் கொள்ளுவதால் (INM) எதிர்கால விவசாயத்திற்கு ஒரு முக்கிய தூணாக நிற்கிறது.

ஒருங்கிணந்த உர நிர்வாகத்தில் ஆர்கானிக் உரங்கள், இரசாயன உரங்கள், உயிரியல் உரங்கள் போன்றவை மண்ணின் தன்மைகேற்பவும் சாகுபடி செய்யப்பட்ட பயிரின் தேவைக்கேற்பவும் சமசீராக வழங்கபடுவதாகும். இதனால் அதிகப்படியான உரங்கள் பயன்படுத்துவது குறைந்து சாகுபடி செலவும் கணிசமாக குறையும் அதுமட்டுமல்ல கூடுதலான விளைச்சலும் நிலையான வருமானமும் கிடைக்கும்.

**INM குறித்து உலக உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO)யின் கூற்று?**

INM, என்பது அனைத்து ஊட்டசத்துகளை மேம்படுத்துவதன் மூலமாக விரும்பிய பயிர் உற்பத்தி திறனை நிலை நிறுத்து வதற்கும் உகந்த அளவில் மண் வளத்தை பராமரிப்பதாகும்.

**ஒருங்கிணந்த உர நிர்வாகத்தின் முக்கிய கூறுகள்?**

**1) கரிம மூலங்கள்**

1) பண்ணை உரம் (FYM) பயிர் கழவுகளை மக்கிய உரமாக மாற்றி பயன்படுத்துதல்

2) பசுந்தாள் உரம் சணப்பு, தக்கைபூண்டு

3) பசுந்தழை உரம் – இலை தழைகள்

**2) இரசாயன உரங்கள்**

பேரூட்ட உரங்கள் (NPK) தழை மணி சாம்பல் சத்துகள். பயிர்களுக்கு அடிப்படைதேவையான அடியுரமாகும்.

**2) இராண்டாம் நிலை உரங்கள்**

கால்சியம், மெக்னிசியம், கந்தகம். இவை பயிரின் வேர்வளர்ச்சிக்கும் பச்சையம் தயாரிக்க தேவையானது

**3) நுண்ணூட்ட உரங்கள்**

துத்தநாகம், இரும்பு தாமிரம் போரான் மற்றும் மாங்கனீஸ் இவைசிறிய அளவில் தேவைப்பட்டாலும் என்சைம் உற்பத்தி மற்றும் இனப் பெருக்க வளர்ச்சிக்கு முக்கியமானதாகும்.

**உயிர் உரங்கள் (BIO FERTILIZERS)**

1) அசோஸ்பைரில்லம்
2) ரைசோபியம்
3) பாஸ்போ பாக்டீரியா
4) வாம்
5) மைக்கோரைசா

இவற்றிற்கு மேலாக இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை தங்களுடைய நிலத்தின் மண் மாதிரி, நீர்ப்பாசனத்திற்கு பயன் படுத்தும் தண்ணீர் மாதிரியை பரிசோதித்து அதனுடைய பரிந்துரைக்கேற்ப உரமிட்டால் உரச்செலவும் கணிசமாக குறையும், மண்வளமும் பாதுகாக்கப்படும். மண்வளத்தை பாதுகாக்க அவசியமாக தேவையான உரங்களை பயன் படுத்திட கூடுதல் வருமானம் பெறலாம்.

**INM மேம்படுத்த மத்திய அரசு மேற்கொள்ளபட்டு வரும் திட்டங்கள்?**

1) மண்வள அட்டை திட்டம் (SOIL HEALTH CARD)
2) PKVY - பரம் பரகத் கிரிஷி விகாஸ் யோஜனா – ஆர்கானிக் சாகுபடியை ஊக்குவித்தல் – வட்டார அளவில் கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மானிய உதவியுடன் செயல்படுத்துவதில்
3) நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMSA) கால நிலை மாற்றத்திற்கு மாற்றாக பயிர் சாகுபடி
4) ராஷ்ட்ரீய கிரிஷி விகாஸ் யோஜனா (RKVY)
5) உரத் தரக்கட்டுபாடு (QUALITY CONTROL)
6) ஒருங்கிணைந்த ஊட்டசத்து மேலாண்மை திட்டங்கள்

**INMயால் ஏற்படும் நன்மைகள்?**

1) மண்வளம் பேசப்படுகிறது
2) தேவைக்கேற்ப உரமிடுவதால் சாகுபடி செலவு குறைதல்
3) சுற்றுப்புற சூழலியல்கேற்ற பயன்பாடு
4) விளைச்சல் அதிகரிப்பு

பயிருக்கு மட்டுமல்ல இந்த உர மேலாண்மை ஒரு செழிப் பான மற்றும் மீள் தன்மை கொண்ட வேளாண் சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்கிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# பூச்சிக்கொல்லிகளின் விசத்தன்மை நிலை வகைப்பாடு பற்றி பயிற்சி அளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



மதுரை, ஜன.16

வெ.செல்வராஜ், வேளாண்மை உதவி இயக்குநரின் தலைமையின் கீழ் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுக்கா ஸ்ரீரெங்கபுரத்தில் அமைந்துள்ள கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் இறுதியாண்டு பயின்று வரும் மாணவி சகளான முனிசா, தருணிகா, ஜீவிதா, கோபிகா, அன்சல்னா, நெஷ்மிக்கா மற்றும் அஜிதா ஆகியோர் சேர்ந்து வாலாந்தூர் கிராம மக்களுக்கு பூச்சிக்கொல்லிகளின் வித்தன்மை நிலை வகைப்பாடு பற்றி பயிற்சி அளித்தார்கள். இதில்

**சிவப்பு லேபிள் – விசம்**

வித்தன்மை நிலை : மிக மிக அதிக விசத்தன்மை கொண்டது.

குறிப்பு : மிக அதிக ஆபத்தானது. மிகுந்த பாதுகாப்புடன் மட்டும் பயன்படுத்த வேண்டும்.

**மஞ்சள் லேபிள் – விசம்**

விசத்தன்மை நிலை : அதிக விசத்தன்மை கொண்டது.

கவனக்குறைவால் உயிர் ஆபத்து ஏற்படும்.

**நீலம் லேபிள் – ஆபத்து**

விசத்தன்மை நிலை : மிதமான விசத்தன்மை கொண்டது.

குறிப்பு : பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றினால் பயன்படுத்த லாம்.

**பச்சை லேபிள் – எச்சரிக்கை :**

விசத்தன்மை நிலை : குறைந்த விசத்தன்மை கொண்டது.

குறிப்பு : ஒப்பீட்டளவில் பாதுகாப்பானது.

நடைபெற்ற இந்த செயல்விளக்கத்தின் மூலம் விவசாயிகள் தெளிவான புரிதலைப் பெற்றதுடன், மிகவும் பயனுள்ளதாக இருந்த தாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

# வசந்தம் அக்ரிடெக்

VASANTHAM Agri Tech

தலைமை அலுவலகம்: 129/1ஏ2, வண்டியூர் ரிங் ரோடு, சங்கு நகர், மதுரை, தமிழ்நாடு-625020.

கிளைகள்:-மதுரை,சிவகங்கை,திருநெல்வேலி

## 1 பவர் வீடர் = 40 வேலை ஆட்கள்

## இப்போது அரசு மானியத்தில்

- » 40% - பெரிய விவசாயி
- » 50% - பெண்கள் / SC/ST
- » 60% - சிறுகுறு விவசாயி
- » 70% - சிறுகுறு விவசாயி & SC/ST



Sarathi i06

### மானியத்திற்கு விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள்

- » ஆதார்
- » புகைப்படம்
- » பட்டா
- » அடங்கல்
- » சாதிச் சான்றிதழ் (தகுதி இருந்தால்)
- » சிறுகுறு விவசாயி சான்றிதழ்



Yield max VT 260

### உடனடி மானியம் உள்ள மாவட்டங்கள்

- » மதுரை
- » சிவகங்கை
- » விருதுநகர்
- » ராம்நாடு



Sirachi 8D6

1,22,344 மதிப்புள்ள 9 HP டீசல் பவர் வீடர்,SC மற்றும் சிறு விவசாயிக்கு 36,703 மட்டுமே

இப்போதே விண்ணப்பியுங்கள் +91 75400 66652

# நவீன வேளாண்மையில் மருந்து கூர்க்கன் கிழங்கு - ஒரு பார்வை

### எந்த வகையான மண் தேவை?

கோலியஸ் செம்மண் அல்லது மணலுடன் கூடிய செம்மண் மற்றும் சரளை வகை மண் உள்ள இடங்களில் சாகுபடி செய்யலாம். வேரின் வளர்ச்சிக்கு மண்ணின் தன்மை கடினமாக இருக்கக் கூடாது. நல்ல வடிகால் வசதியை உடைய மணற்பாங்கான மண் வகைகள் மிகவும் ஏற்றவை.

தண்ணீர் தேங்கும் நிலங்கள் கோலியன் சாகுபடிக்கு ஏற்றதல்ல வருடத்திற்கு செ.மீ அளவிற்கு மழை பெறும் பகுதிகள் ஏற்றது. மலைச் சரிவுகள் மிகவும் நன்றாக வளர்ந்து மகசூல் கொடுக்கும் என்றாலும் சமவெளிப் பகுதியிலும் நன்கு சாகுபடி செய்யலாம். தமிழ்நாட்டில் நீர்ப்பாசன வசதி உள்ள அனைத்துப் பகுதியிலும் நல்ல முறையில் சாகுபடி செய்ய இயலும்.

கோலியஸ் கிழங்கு இதன் இலைத்தண்டுகள் மூலம் சாகுபடி செய்யப்படுகின்றது. டேபிள் ரோஜா, கற்பூரவல்லி செடிகளை நடவு செய்வது போல தண்டுகளை ஒடித்து நடவு செய்தால் நன்கு வளரும். மூன்று அல்லது நான்கு கணுக்களுடன் கூடிய நுனி தண்டுகளை மட்டுமே நடவுக்குப் பயன்படுத்த வேண்டும்.

கோலியஸ் நடவு செய்ய உள்ள நிலம் நன்கு ஆழமாக, புழுதிபட உழவு செய்யப்பட்டிருக்க வேண்டும். பலமுறை உழவு செய்தால் களைகள் மட்டுப்படும். நன்கு மக்கிய சுளை விதைகள் இல்லாத மக்கிய தொழு உரம் ஏக்கருக்குக் குறைந்தது 15 மெட்ரிக் டன் அளவிற்காவது கடைசி உழவிற்கு முன்னர் சிதறி நன்கு மண்ணுடன் கலக்குமாறு உழவு செய்ய வேண்டும். கிழக்கு மேற்காக இரண்டு அடி இடைவெளியில் பார்பிடிக்க வேண்டும்.

பாரின் பக்கவாட்டில் விதைக்குச்சிகளை நடவு செய்யலாம். பொதுவாக ஜூன்-ஜூலை அல்லது செப்டம்பர்-அக்டோபர் மாதம் நடவு செய்ய ஏற்ற பருவம். இரண்டு அடி இடைவெளி பாரில் ஒன்றரை அடி செடிக்குச்செடி இடைவெளி இருக்குமாறு நடவு செய்யலாம். ஒரு ஏக்கரில் நடவு செய்ய சுமார் 15000 விதைத்தண்டுகள் தேவைப்படலாம். சற்றே வளம் குறைந்த மண் என்றால் ஒரு அடி இடைவெளியில் நடவு செய்யலாம். அதற்கு சுமார் 22000 விதைத்தண்டுகள் தேவைப்படும்.

10:26:26 காம்ளெக்ஸுடன், யூரியாவைக் கலந்து ஏக்கருக்கு சுமார் 100 கிலோ அளவில் செடிகள் நட்ட 30வது நாளிலும் பிறகு 45-வது நாளிலும் பிரித்து இடலாம். துத்தநாக சல்பேட் நுண்ஊட்டத்தினை ஏக்கருக்கு 6 கிலோ அடி உரமாகத் தூவலாம்.

**நீர்ப்பாசனம் எப்படி?**

செடிகளுக்குச் சரியான நேரத்தில் தேவையறிந்து நீர்ப்பாசனம் செய்வது அவசியம், செடிகள் நட்ட முதல் மாதத்தில் வாரம் ஒரு முறையும் பின்னர் மாதம் மூன்று முறையும் நீர்ப்பாசனம் செய்வது நல்லது. மிக அதிக அளவு தண்ணீர் தேவைப்படாத பயிர் என்பதால் குறைவான நீர் ஆதாரம் இருக்கும் இடங்களில் சொட்டு நீர்ப்பாசனம் மூலமும் தண்ணீர் பாசனம் மேற்கொள்ளலாம்.

கோலியஸ் கிழங்கு ஒரு மருந்து மூலப்பொருள் தான் ஆனாலும் தனிப்பயிராக சாகுபடி செய்யப்படும் போது இதற்கும் பூச்சி நோய் தாக்குதல் உண்டாகின்றது. ஆகவே, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை அவசியமாகின்றது. கோலியாஸ் கிழங்கு சாகுபடியில் செடியினைத் தாக்கும் பூச்சிகளில் நூற்புழுக்கள் சேதத்தை உண்டாக்குகின்றது. நூற்புழுக்கள். பயிர் செய்யப்படும் அநேக காய்கறிப் பயிர்களையும் குறிப்பாக வள்ளிக் கிழங்கு, சேனைக் கிழங்கு பயிர்களையும் மாற்று உணவுப் பயிராகக் கொண்டது வேர் முடிச்சு நூற்புழுவின் தாக்குதலால் செடியின் வளர்ச்சி குன்றி குட்டையாகக் காணப்படும். கோடைக்காலங்களில் செடிகள் வாடி காய்ந்து விடும். தாக்கப்பட்ட செடிகள் தண்ணீர் பாய்ச்சினாலும் பிழைக்காது.



செடிகளின் வேர்ப்பகுதியைப் பிடுங்கிப் பார்த்தால் வேர்களில் ஆங்காங்கே சிறிய மற்றும் பெரிய வீக்கங்கள் முடிச்சுகள் போல காணப்படும்.

**நூற்புழு கட்டுப்படுத்துவது எப்படி?**

நூற்புழுக்கள் நுனி மூலம் உட்சென்று வேரின் நுனி இடத்தில் அசையாமல் இருந்து சத்துப் பொருட்கள் உண்பதால், சத்துக்கள் மேலே செல்ல இயலாமல், செடிகள் வாடி சாய்ந்து இறந்து விடுகின்றன. மேலும், நூற்புழுக்கள் உள்ள இடங்களில் செல்கள் நீண்டுவளர்ந்து எண்ணிக்கையில் அதிகம் ஆவதால், வேர்களில் முடிச்சுகள் போன்ற வீக்கம் காணப்படுகின்றது. இதனால் பயிர் எண்ணிக்கை குறைந்து மகசூல் குறையும். மேலும் கிழங்குகள் பெருக்காமல் பெருமளவு மகசூல் குறையும்.

நடவு செய்யத் தேர்வு செய்த நிலத்தில் நூற்புழு பரிசோதனை செய்து நூற்புழு தாக்குதல் இல்லாத இடங்களில் பயிர் செய்ய வேண்டும். கோலியஸ் சாகுபடி செய்த நிலத்தில் பயிர் சுழற்சி முறையில் சோளம், மக்காசோளம் போன்ற நூற்புழு தாக்காத பயிர்களை வருடத்திற்கு ஒரு முறை பயிர் செய்வது நல்லது. மெரிகோல்டு எனும் செண்டுமல்லி பூச்செடியின் வேரில் இருந்து வரும் திரவம் வேர் முடிச்சு நூற்புழுக்களை அழிக்க வல்லது.

ஆதலால் செண்டுமல்லி பூச்செடியை பார் மற்றும் வாய்க்கால் ஓரங்களில் ஊடுபயிராக நடவு செய்து பராமரிக்க வேண்டும். ஏக்கருக்கு 100 கிலோ நன்கு தூளாக்கப்பட்ட வேப்பம் புண்ணாக்கு நடவுக்கு முன்னர் கடைசி உழவின் போது பரவலாகத் தூவி நன்கு உழவு செய்து பின்னர் பார் போடலாம். ஈரப்பதம் மட்டுமே இருக்க வேண்டும். இதனை சுத்தமான கோணிப்பைகளில் சேகரித்து வெளிச்சமும் காற்றோட்டமும் உள்ள இடத்தில் சேகரித்து வைக்கலாம்.

கோலியஸ் சாகுபடி செலவு பல்வேறு காரணிகளைப் பொறுத்து மாறுபடும். செலவுகளை தோராயமாக மட்டுமே கொடுக்க இயலும். விவசாயி இருக்கும் இடம், பயன்படுத்தும் சாகுபடி முறை, நடவுப் பொருட்களின் விலை, கூலி, வண்டி வாடகை மற்றும் சந்தை நிலவரங்களைப் பொறுத்து மாறுபடலாம். ஒரு ஏக்கருக்கான தோராயமான செலவினங்களை வகைப்படுத்தலாம்.

தகவல் : **வீ.யுவராஜ் தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், ஸ்ரீ சக்தி கல்லூரி, கோயம்புத்தூர்.**

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW

isha

POWERGRID

BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# எருக்கஞ்செடி கரைசல் தயாரிப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



பெரம்பலூர், ஜன.16

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டாரம், செட்டிகுளம் கிராமத்தில் விவசாயிகளுக்கான எருக்கஞ்செடி கரைசல் தயாரிப்பு செயல்முறை விளக்கப்பயிற்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கிராமத்தில் தங்கிப் பயிற்சி பெறும் திட்டத்தின் மூலமாக நாளந்தா வேளாண்மைக் கல்லூரி மாணவியர்களான அ.அபிதாரணி, ரா.அபிநயா, வீ.அன்னலட்சுமி, தோ.அந்தோனியம்மாள், ம.பாமா, ரா.தீபிகா, மு.தேவிகா மற்றும் சே.திவ்யதர்ஷினி ஆகியோர் விவசாயிகளுக்கு எருக்கஞ்செடி பூ, தண்டு, இலை, காய் பயன்படுத்தி எருக்கஞ்செடி கரைசல் தயாரிப்பது மற்றும் அதன் பயன்பாடு குறித்து விளக்கமாக எடுத்துரைத்தனர்.

எருக்கஞ்செடி கரைசல் எருக்கிலை, தண்டுகள், பூக்கள் மற்றும் காய்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் ஒரு இயற்கை உரம் மற்றும் பூச்சிவிரட்டி ஆகும். இது பயிர்களின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, போரான் சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்து, வாழையில் ஏற்படும் வாடல் நோய் போன்ற பூஞ்சை நோய்களைக் கட்டுப்படுத்த உதவுகிறது, மேலும் வேர் வளர்ச்சியைத் தூண்டி விளைச்சலை அதிகரிக்கவும் பயன் படுகிறது.

இதன் மூலம் இது வாழையில் வரும் வாடல் நோய் போன்ற பூஞ்சை நோய்களைக் கட்டுப்படுத்தி தாவரங்களுக்குத் தேவையான போரான் சத்தை வழங்குகிறது. வேர்களை வலுப்படுத்தி, அதிக விளைச்சலைத் தருகிறது. போன்ற நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் எருக்கஞ்செடி கரைசல் தயாரிப்பு குறித்தும் செயல்முறை குறித்தும் தெளிவாக அறிந்து பயனடைந்தனர்.

# தென்னை மரத்தில் வரும் காண்டாமிருக வண்டு தாக்கத்தின் தடுப்பு முறையைப் பற்றி விளக்கம் அளித்த வேளாண் கல்லூரி மாணவி

திருச்சி, ஜன.16

காண்டாமிருக வண்டு தென்னை மரத்தின் இளம் மொட்டுகள் மற்றும் இலைகளைத் துளைத்து சேதப்படுத்தும் முக்கிய பூச்சி ஆகும். இதனால் மர வளர்ச்சி குறைந்து காய்ப்புத் திறன் பாதிக்கப் படுகிறது.

**காண்டாமிருக வண்டு என்றால் என்ன?**

காண்டாமிருக வண்டு என்பது தென்னை, பனை போன்ற மரங்களைத் தாக்கும் ஒரு முக்கிய பூச்சி. இந்த வண்டு தலை பகுதியில் கொம்பு போன்ற அமைப்பு இருப்பதால் இதற்கு இந்த பெயர் வந்தது.

**காண்டாமிருக வண்டு தாக்கத்திற்கு ஏற்ற சூழ்நிலை?**

வெப்பமும் ஈரப்பதமும் அதிகமான காலநிலை, அதிக வெப்பம் மற்றும் ஈரப்பதம் வண்டுகள் பெருக உதவுகிறது. அழுகிய கரிமப் பொருட்கள் இருப்பது, அழுகிய தென்னைத் தண்டு, குப்பைகள், உரக் குழிகள், மாட்டுச் சாணக் குவியல்கள் போன்றவை இனப் பெருக்கத்திற்கு ஏற்ற இடமாகும்.

பண்ணை சுகாதாரம் குறைவாக இருப்பது தோட்டத்தில் குப்பைகள் சேர்ந்து இருப்பதால் வண்டுத் தாக்கம் அதிகரிக்கும். மழைக்காலம் மற்றும் அதற்குப் பிந்தைய காலம் இந்த காலங் களில் வண்டுத் தாக்கம் அதிகமாக காணப்படும். பழைய மற்றும் பராமரிப்பு குறைந்த தென்னைத் தோட்டங்கள் வயதான மரங்கள் வண்டுகளை அதிகம் ஈர்க்கும். நிழல் மற்றும் ஈரமான மண் ஈரமான, நிழலான சூழ்நிலைகள் இளம் வண்டு வளர்ச்சிக்கு உதவும்.

**தாக்கத்தின் அறிகுறிகள்**

இளம் மொட்டுகளில் துளை மற்றும் கடித்த தடயங்கள் காணப்படும். புதிதாக வெளிவரும் இலைகளில் ா வடிவ அல்லது அரைகோள வெட்டுகள் தோன்றும். மொட்டின் அருகில் நார் தூள் / கழிவு (frass) காணப்படும். இளம் இலைகள் சிதைந்து, கிழிந்த தோற்றத்தில் இருக்கும். கடுமையான தாக்கத்தில் மொட்டு அழுகி உலர்ந்து விடும். மர வளர்ச்சி குறைந்து காய்ப்புத் திறன் குறையும்.

**தாக்கத்தால் ஏற்படும் பாதிப்புகள்**

இளம் மொட்டுகள் சேதமடைந்து புதிய இலைகள் சரியாக வளராது. இலைகள் கிழிந்தும் வடிவம் மாறியும் காணப்படும். தென்னை மரத்தின் வளர்ச்சி மந்தமாகும். காய் பிடிப்பு குறையும் மற்றும் மகசூல் குறைவு ஏற்படும். கடுமையான தாக்கத்தில் மொட்டு அழுகி மரம் செத்து போகும் அபாயம். நீண்ட காலத்தில் பண்ணை உற்பத்தித் திறன் குறையும். விவசாயிக்கு பொருளாதார இழப்பு ஏற்படும்.

**காண்டாமிருக வண்டின் மேலாண்மை முறைகள்**

பண்ணை பகுதியில் அழுகிய மரத்துண்டுகள், குப்பைகள், எருமை சாணம் போன்றவை சேராமல் அகற்ற வேண்டும். இயந்திர கட்டுப்பாடு : பாதிக்கப்பட்ட மரங்களில் வண்டுகளை கைமுறையில் பிடித்து அழிக்க வேண்டும். ஃபெரோமோன் வலை : ரைனோலியூர் (Rhinolure) வலைகளை ஒரு ஏக்கருக்கு 2—3 அமைத்து வண்டுகளை பிடிக்கலாம். உயிரியல் கட்டுப்பாடு : Metarhizium anisopliae பூஞ்சை கலந்த மண்/சாணத்தை குழிகளில் போடலாம். வேப்ப எண்ணெய்/வேப்ப குச்சி : இளம் மொட்டுகளில் வேப்ப எண்ணெய் தடவுதல் அல்லது வேப்ப குச்சி போடுதல் பயனளிக்கும்.

ரைனோசரஸ் வண்டு தென்னை மரங்களுக்கு பெரும் சேதம் விளைவிக்கும் முக்கிய பூச்சியாகும். இதனை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, பண்ணை சுத்தம், இயந்திர, உயிரியல் மற்றும் தேவையான அளவில் இரசாயன முறைகளை ஒருங்கிணைந்து பின்பற்றினால் வண்டுத் தாக்கத்தை குறைக்க முடியும். சரியான மேலாண்மை முறைகள் மூலம் தென்னை மரங்களின் ஆரோக்கியம் பாதுகாக்கப்பட்டு நல்ல மகசூல் பெறலாம்.

மேலும் விவரங்களுக்கு க.**தமிழரசி, இளங்கலை வேளாண் மாணவி மற்றும் முனைவர் B.குணா, இணைப் பேராசிரியர், வேளாண் விரிவாக்க துறை, M.ஆர்த்தி, ச.பூர்ணிமா, உதவி பேராசிரியர்கள் மற்றும் குழு மேற்பார்வையாளர்கள், நாளந்தா வேளாண்மை கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna 8789@gmail.com, தொலைபேசி எண் : 99446 41459** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

# பயிர் வெட்டும் பரிசோதனையை கள ஆய்வு நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்

நாமக்கல், ஜன.16

நாமக்கல் மாவட்டம், எலச்சிப்பாளையம் வட்டாரத்தில் வேளாண் அலுவலர் அனிதா, வேளாண் உதவி அலுவலர் வெற்றிவேல் மற்றும் மா.பூபதி, புள்ளியியல் துறை அதிகாரி சுப்பிரமணியன் ஆகியோர் கொன்னையார் கிராமத்தில் 'பயிர் வெட்டும் பரிசோதனை' மேற்கொண்டனர்.



இதனை பிஜிபி வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு மாண வர்கள் நேரில் கள ஆய்வு மேற்கொண்டு அவற்றின் நோக்கம், செய்முறை மற்றும் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டனர்.



பயிர் வெட்டும் பரிசோதனை (Crop Cutting Experiment - CCE) என்பது ஒரு கிராமத்தின் அல்லது பகுதியின் பயிர் விளைச்சலைத் துல்லியமாக மதிப்பிடுவதற்கு அரசு மற்றும் வேளாண்மைத் துறைகளால் செய்யப்படும் ஒரு முறையாகும், இதில் வயலில் ஒரு குறிப்பிட்ட பகுதியை வெட்டி, அதில் உள்ள விளைச்சலை அளந்து ஒட்டு மொத்த விளைச்சல் கணக்கிடப்படுகிறது. தமிழில் இதை பயிர் வெட்டுப் பரிசோதனை அல்லது பயிர் வெட்டும் சோதனை என்று அழைக்கலாம், மேலும் இது விவசாயக் கொள்கைகளை உருவாக் கவும், காப்பீட்டிற்காகவும் உதவுகிறது.

**பயிர் வெட்டும் பரிசோதனையின் நோக்கம் –**

✓ **விளைச்சல் மதிப்பீடு** : ஒரு பகுதிக்கு எவ்வளவு மகசூல் கிடைக்கும் என அறிவியல் பூர்வமாக மதிப்பிடுவது.

✓ **கொள்கை உருவாக்கம்** : ஏற்றுமதி, பணவீக்கம் போன்ற விவசாயக் கொள்கைகளை வகுக்க உதவுகிறது.

✓ **காப்பீடு** : பயிர்க் காப்பீட்டுத் திட்டங்களில் இழப்பீட்டுத் தொகையை நிர்ணயிக்க உதவுகிறது.

**செயல்முறை**

✓ **தேர்வு** : ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் உள்ள வயல்களில் சீரற்ற முறையில் சில இடங்கள் தேர்ந்தெடுக்கப்படும்.

✓ **அளவீடு** : தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் ஒரு குறிப்பிட்ட பரப்பளவு (எ.கா., 5மு5 மீட்டர்) குறிக்கப்படும்.

✓ **அறுவடை** : அந்த குறிப்பிட்ட பகுதியில் உள்ள பயிர்கள் மட்டும் அறுவடை செய்யப்படும்.

✓ **எடை** : அறுவடை செய்யப்பட்ட பயிர்களின் எடை (ஈரப்பதம் நீக்கப்பட்ட பின்) அளவிடப்படும்.

✓ **கணக்கீடு** : இந்த எடை, மொத்த வயலின் பரப்பளவுக்கு மாற்றப்பட்டு, சராசரி விளைச்சல் கணக்கி டப்படும்.

# பூச்சிக்கொல்லி மருந்துகளின் நச்சுத்தன்மை குறியீடு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் வேளாண் கல்லூரி மாணவிகள்

பெரம்பலூர், ஜன.16

பெரம்பலூர் மாவட்டம், சிறுவாச்சூரில் மகளிர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய இறுதி ஆண்டு மாணவிகள், ஊரக வேளாண் அனுபவ பயிற்சி (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக, விவசாயிகளுக்கான முக்கிய விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.



இந்நிகழ்ச்சியில், பூச்சிக்கொல்லி மருந்துகளின் நச்சுத்தன்மை குறியீடுகள் (Pesticide Toxicity Labels) குறித்து விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன. குறிப்பாக, பூச்சிக்கொல்லி மருந்து பாட்டில்களின் பின்புறத்தில் காணப்படும் முக்கோண வடிவ குறியீடுகள் மூலம் மருந்துகளின் நச்சுத்தன்மை நிலைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன என்பதையும், அந்த குறியீடுகளை எவ்வாறு சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதையும் மாணவிகள் தெளிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், அதிக நச்சுத்தன்மை கொண்ட பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தும் போது மனித உடல்நலத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. இவ் வகை பாதிப்புகளைத் தவிர்க்கும் வகையில், பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிக்கும் போது கையுறை (Gloves), முக்கவசம் (Mask), காலுறை (ரீஜுலிஎளவி), நீள கை சட்டை மற்றும் நீள கால்சட்டை போன்ற பாதுகாப்பு உபகரணங்களை கட்டாயமாக பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்தினர். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியின் மூலம், பூச்சிக்கொல்லி மருந்து களை பாதுகாப்பாக பயன்படுத்துவதன் அவசியம் விவசாயிகள் மற்றும் பொது மக்கள் மத்தியில் மேலும் வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மாணவிகள் ஆர்யா பிஜு, கௌரி செ., ஜெசிகா, ஜீவா.சொ, கீர்த்தனா ச., மோனிக்கா.து, மோத்திகா.ரா, மற்றும் யாழினி.செ ஆகியோர் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தனர். விவசாயிகளுக்கு பயனுள்ளதாக அமைந்ததுடன், பாதுகாப்பான மற்றும் பொறுப்பான வேளாண் நடைமுறைகளை ஊக்குவிக்கும் முயற்சியாக கருதப்பட்டது.

# மண் மாதிரி சேகரித்தல் மற்றும் ஊரக பங்கேற்பு மதிப்பீடு செய்த வேளாண் கல்லூரி மாணவர்கள்




ஈரோடு, ஜன.16

ஈரோடு. கோவை வேளாண் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த இறுதி ஆண்டு மாணவர்களின் ஒரு குழுவானது (சௌமியா, சௌந்தர்யா, ஸ்ரீ அஷ்விதா, ஸ்ரீ நித்யா, சுபஸ்ரீ.ச, சுபஸ்ரீ.செ. ஜா, சுகி, சுதர்ஷினி, சுஜாதா, சுஜித்தா) ஈரோடு மாவட்டம், நம்பியூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் களப்பணி மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக ஜனவரி 14 அன்று நம்பியூர் மற்றும் அதனை சுற்றியுள்ள விவசாயிகளிடம் அந்த பகுதியில் விளையும் பயிர்களுக்கான மேலாண்மை பற்றியும் மேலும் அந்தப் பகுதியில் அவர்கள் சந்திக்க நேரிடும் குறைகள் பிரச்சனைகளை கேட்டு அதற்கான தீர்வுகள் வழங்கப்பட்டன.

இதில் மண் மாதிரி சேகரித்தல், பயிர் மேலாண்மை, நோய் மற்றும் பூச்சி, கட்டுப்பாடு ஊரக பங்கேற்பு மதிப்பீடு போன்றவை கலந்துரையாடப்பட்டு செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

இதில் 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் ஊர் மக்கள் பங்குபெற்று பயன் பெற்றனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333